www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com

A

# மூன்றாம் பருவத்தேர்வு – 2024

வகுப்பு : 7

# தொகுத்தறி மதிப்பீடு – தமிழ்

காலம் : 2 மணி மதிப்பெண்கள் : 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 10 × 1= 10

1. மரம் வளர்த்தால் _____________ பெறலாம்.
அ) மாரி ஆ) மாறி இ) காரி ஈ) பாரி

2. வயலில் விளைந்து முற்றிய நெற்பயிர்களை_____________ செய்வர்.
அ) அறுவடை ஆ) உழவு இ) நடவு ஈ) விற்பனை

3. 'ஓடை+ எல்லாம்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____________.
அ) ஓடைஎல்லாம் ஆ) ஓடையெல்லாம் இ) ஓட்டையெல்லாம் ஈ) ஓடெல்லாம்

4. திருநெல்வேலி _____________ மன்னர்களோடு தொடர்பு உடையது.
அ) சேர ஆ) சோழ இ) பாண்டிய ஈ) பல்லவ

5. கயல் போன்ற விழி– இத்தொடரில் உள்ள அணி _____________
அ) உவமை அணி ஆ) எடுத்துக்காட்டு உவமை அணி
இ) வஞ்சப்புகழ்ச்சி அணி ஈ) இல்பொருள் உவமையணி

6. "இடர் ஆழி நீங்குகவே "–இத்தொடரில் **இடர்** என்ற சொல்லின் பொருள் _____________.
அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி இ) ஆர்வம் ஈ) இன்பம்

7. செல்வத்தின் பயன்_____________ வாழ்வு.
அ) ஆடம்பர ஆ) நீண்ட இ) ஒப்புரவு ஈ) நோயற்ற

8. _____________ ஒரு நாட்டின் அரணன்று.
அ) காடு ஆ) வயல் இ) மலை ஈ) தெளிந்த நீர்

9. மக்கள் அனைவரும் _____________ ஒத்த இயல்புடையவர்கள்.
அ) பிறப்பால் ஆ) குணத்தால் இ) நிறத்தால் ஈ) பணத்தால்

10. தண்ணீர் சலசல வென ஓடியது.–இத்தொடரில் _____________ அமைந்துள்ளது.
அ) அடுக்குத்தொடர் ஆ) இரட்டைக்கிளவி
இ) தொழிலாகுபெயர் ஈ) பண்பாகுபெயர்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 2 × 1 = 2

11. பயணம் என்ற சிறுகதையின் ஆசிரியர் _____________.

12. உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய் என்று கூறியவர் _____________.

**III. பொருத்துக.** 4 × 1 = 4

| | | |
|---|---|---|
| 13. சாந்தம் | – | சிறப்பு |
| 14. மகத்துவம் | – | உலகம் |
| 15. தாரணி | – | கருணை |
| 16. இரக்கம் | – | அமைதி |

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com

**IV. சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக.** 2 × 1 = 2

17. நெல்லையப்பர் கோவில் _____________ உள்ளது?

18. _____________ சொற்களைப் பேச வேண்டும்?

**V. அடிபிறழாமல் எழுதுக.** 2 + 4 = 6

19. 'உறுபசியும்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

20. 'மாரியொன்று' – எனத் தொடங்கும் பழமொழி நானூறு பாடலை எழுதுக.

**VI. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்கவும்.** 5 × 2 = 10

21. 'பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை'– எவ்வாறு?

22. நெற்கதிரிலிருந்து நெல்மணியை எவ்வாறு பிரிப்பர்?

23. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?

24. ஒரு செயலைச் செய்ய எவற்றையெல்லாம் ஆராய வேண்டும்?

25. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?

26. ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?

27. உலகம் நிலைதடுமாறக் காரணம் என்ன?

28. விடுதலைப் போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.

**VII. ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்கவும்.** 2 × 2 = 4

29. இரட்டைக்கிளவி என்பது யாது? சான்று தருக.

30. உருவக அணி என்றால் என்ன?

31. கலைச்சொற்கள் தருக.

அ) Ambition

ஆ) Poverty

**VIII. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்கவும்.** 3 × 4 = 12

32. பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.

33. சிறந்த நாட்டின் இயல்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?

34. ஆட்சிமொழி பற்றிய காயிதே மில்லத்தின் கருத்தை விளக்குக.

35. திருநெல்வேலிப் பகுதியில் நடைபெறும் உழவுத் தொழில் குறித்து எழுதுக.

36. இல்பொருள் உவமையணி என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

**IX. பின்வரும் வினாவிற்கு விடை அளிக்க.** 1 × 10 = 10

37. அ) உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) ஒற்றுமையே உயர்வு என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

www.Padasalai.Net